**நாள் 11.12.2023.**

**OS.No. 27/2022**

**வா.சா.1 சாட்சி ஜெகதீஷ் மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணத்தை அனுசரித்து முதல்விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்தேன். முதல்விசாரணை வாக்குமூலம் பத்தி 4 இல் வா.சா.ஆ.41 ஜெராக்ஸ் காப்பி செட்டில்மெண்ட் பத்திரம் குறித்து முதல்விசாரணையில் சொல்லவில்லை. பத்தி 4 இல் சொல்லியுள்ள பரவைநாச்சியார் பெயரில் கொடுக்கப்பட்ட செட்டில்மெண்ட் பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. செட்டில்மெண்ட் விசாரணைகள் குறித்து தெரியாது. சொத்து முக்கோணவடிவில் இருப்பதாக வா.சா.ஆ.41 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. சொத்தை நாங்கள் அனுபவிக்கிறோம் என்றும், வேலி குறித்தும் பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 17 ஜானகிபாண்டியனுக்கு கமலத்தம்மாள் எழுதி கொடுத்த பத்திரத்தின் நான்கெல்லையில் பொன்னுசாமி மூப்பனார் காட்டப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. ஜானகிபாண்டியனுக்கு சொத்தை விற்ற விபரம் நேரடியாக தெரியாது. ஜானகிபாண்டியனுக்கு 1 ஏக்கர் விற்றதும், பரவைநாச்சியாருக்கு 33 செண்ட் விற்றதும் போக பாக்கி 93 செண்ட் கமலத்தம்மாளுக்கு சொந்தமானது என்றால் சரிதான். அதை அவர் யாருக்கு விற்றார் என்று தெரியாது. 93 செண்ட் இடத்தை யார்யார் அனுபவித்து வருகிறார் என்பதும் தெரியாது. கமலத்தம்மாளுக்கு சொந்தமாக இருந்த 2.26 ஏக்கர் எந்த இடத்தில் இருக்கிறது என்று நான் பார்த்திருக்கிறேன். வா.சா.ஆ 18 மற்றும் 19 பதிவு அலுவலகத்தில் கிழிந்தநிலையில் உள்ளதால் நகல் எடுக்க இயலாது என தெரிவித்துள்ளனர் என்றால் ஆமாம். ஆனால் வா.சா.ஆ.19 உடன் 22.08.1963 தேதியிட்ட ஆவணத்தின் ஜெராக்ஸ் நகலை இணைத்துள்ளேன் என்றால் ஆமாம். வா.சா.ஆ.18 இல் சொல்லப்பட்டுள்ள சுப்ரமணியபிள்ளைக்கு பொன்னுசாமி மூப்பனார் எழுதி கொடுத்த கிரய பத்திரம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. சுப்ரமணியபிள்ளை அமலோப்ப செல்வம் என்பவருக்கு எழுதி கொடுத்த கிரய பத்திரம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. வா.சா.ஆ.20 முதல் 25 ஆவணங்கள் ஏற்பட்டது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது அப்போது நான் சிறுவனாக இருந்தேன். பொன்னுசாமி சுப்ரமணியனுக்கு விற்ற சொத்தில் திருச்சி ரோடு நான்கெல்லையாக காட்டப்படவில்லை என்றால் எனக்கு

தெரியாது. 04.04.1960 செட்டில்மெண்ட் பத்திரத்தில் திருச்சி ரோடுக்கு தென்புறம் உள்ள சொத்துதான் பொன்னுசாமிக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை படித்து பார்த்திருக்கிறேன். திருச்சி ரோடுக்கு தென்புறம் உள்ள சொத்தை பொன்னுசாமி விற்றிருக்கிறார். 04.04.1960 பத்திரப்படி திருச்சி ரோடுக்கு தென்புறம் உள்ள சொத்தை பொன்னுசாமி விற்கவில்லை என்றும் அதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் 1ஆம்பிரதிவாதி எழுதி கொடுத்த ஒப்பந்தம் மற்றும் அதிகார பத்திரத்தை ரத்து செய்யவேண்டும் என்று பதிவுத்துறைக்கு மனு கொடுத்தேன், அதுகுறித்து விசாரணை நடந்தது. அந்த என்னிடம் காட்டப்படும் மனு பதிவுத்துறைக்கு நான் கொடுத்த மனுதான் என்னிடம் காட்டப்படுகிறது அந்த மனு **பி.சா.ஆ.1**(5 தாள்கள்). அதில் சொல்லப்பட்டுள்ள செல்போன் எண் என்னுடையதுதான். அந்த மனுவில் நான் சொத்து வாங்கியது கமலத்தம்மாளுக்கு சொந்தமாக இருந்தது பரவைநாச்சியாருக்கு விற்றது ஆகியவை குறித்து சொல்லியிருக்கிறேன். அந்த மனுவின் இணைப்பில் 1 முதல் 14 ஆவணங்கள் சொல்லப்பட்டுள்ளது. அதில் 1வது ஆவணமாக 740/60 என செட்டில்மெண்ட் ஆவணம்தான் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆவண எண் 740/60 என்னிடம் காட்டப்படுவதுதான் சாட்சி தற்போது மாற்றி 740/60 ஆவணம் அந்த மனு தாக்கல் செய்த போது தனக்கு கிடைக்கவில்லை என்கிறார். சாட்சி தற்போது மாற்றி என்னிடம் காட்டப்படும் தகவல் அறியும் உரிமை சட்டத்தில் பிரதிவாதி பெற்ற ஆவணஎண் 740/60 நான் தாக்கல் செய்ததல்ல. நான் பதிவு அலுவலகத்தில் 14 ஆவணங்கள் தாக்கல் செய்தேன். அதில் முதலாவது ஆவணம் செட்டில்மெண்ட் ஆவணம் 740/60 என காட்டப்பட்டுள்ளது. 740/60 என்ற ஆவணத்தை நான் படிக்கவில்லை. இணைப்பில் கண்ட 14 ஆவணங்களையும் தாக்கல் செய்தேனா என்றால் முதல் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. சாட்சி மீண்டும் மாற்றி பி.சா.ஆ.1 மனுதாக்கல் செய்தபோது தாம் அந்த ஆவணத்தின் ஜெராக்ஸ்நகல் தாக்கல் செய்ததாக சொல்கிறார். ஆவண எண் 740/60 க்கு பதிவு அலுவலகத்தில் நகல் கேட்டு மனு செய்தேன் ஆனால் நகல் கிடைக்கவில்லை. அந்த நகல் மனுவை நான் கைப்பட எழுதினேன். தகவல்அறியும் உரிமை சட்டத்தில் பிரதிவாதி பெற்ற ஆவண எண் 740/60 நகல் நான் பதிவு அலுவலகத்தில் மனுவுடன் தாக்கல் செய்ததுதான் என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் ஆவண எண் 740/60 நான் படித்து பார்க்கவில்லை. ஆவண எண் 740/60ன் உண்மை நகலை நான் மனுவுடன் தாக்கல்

செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.41 ஜெராக்ஸ் நகலை நான் மனுவுடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஜெராக்ஸ் ஆவணத்தை ஒத்துகொள்ளமாட்டார்கள் என்பதால் கொடுக்கவேண்டாம் என்று வழக்கறிஞர் சொன்னார். வா.சா.ஆ.41 ஐ 1994, 95 இல் என்னுடைய சகோதரர் கோபால்தாஸ் கொடுத்தார். நீதிமன்றத்தை ஏமாற்றுவதற்காகவும் என் மீது குற்ற நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்காகவும், வா.சா.ஆ.41 என் சகோதரர் கொடுத்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.41 இல் திருச்சி ரஸ்தாவிற்கும்,பொன்னுசாமி மூப்பனார் புஞ்சைக்கும் தெற்கு என்ற வாசகத்தை நானாக எழுதியிருக்கிறேன் என்றால் சரியல்ல. ராஜ் மூப்பனார் புஞ்சை மற்றும் பொன்னுசாமி மூப்பனார் புஞ்சைக்கும் தெற்கு என்பதை நானாக கிழக்கு என மாற்றியிருக்கிறேன் என்றால் சரியல்ல. சொத்துவிபரத்தையும் நான்கெல்லையும் மாற்றி வா.சா.ஆ.41 ஐ தாக்கல் செய்து நீதிமன்றத்தை ஏமாற்றுகிறேன் என்றால் சரியல்ல. பதிவுத்துறைக்கு ரத்து செய்வதற்காக அனுப்பிய மனுவுடன் தாக்கல் செய்த பிரதிவாதி தகவல்அறியும் உரிமை சட்டத்தில் பெற்ற ஆவண எண் 740/60 தான் உண்மையானது என்றால் சரியல்ல. தஞ்சாவூர் வட்டாட்சியர் போட்ட உத்தரவுதான் என்னிடம் காட்டப்படுகிறது அது **பி.சா.ஆ.2** அதற்கு எதிராக மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நீதிபேராணை எண் 25489/2019 இல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் சான்றிட்ட நகல்தான் என்னிடம் காட்டப்படுகிறது அது **பி.சா.ஆ.3**. வட்டாட்சியரின் உத்தரவு ரத்து செய்யப்பட்ட செயல்முறை நாள் 25.09.2017 **பி.சா.ஆ.4**.

7 ஆம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/– A. மலர்விழி)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.